**செய்தி வெளியீடு எண் :2317** **நாள் : 21.12.2022**

**செய்தி வெளியீடு**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கான தொழில் நுட்ப பொருளாதார தொடர்பாக சமூக பணி மாணாக்கர்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு. க.சு..கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தாட்கோ தலைவர் திரு. உ. மதிவாணன், அவர்களால் இன்று (21.12.2022) சென்னை, மெட்ராஸ் மேனேஜ்மென்ட் அசோசியேட், கூட்ட அரங்கத்தில் துவங்கி வைத்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி மற்றவர்களுக்கு இணையாக வாழ வழி இருக்க வேண்டும் என கருத்தினை மையமாக கொண்டு தாட்கோ நிறுவனம் மூலம் பல்வேறு செயல் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது.

நடப்பு ஆண்டியில் 2022-2023 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் துவங்க சாதகமாக உள்ள தொழில் திட்டங்களைக் கண்டறிந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் புதிய வகை தொழில்களில் ஈடுபட உதவிடும் பொருட்டு மாவட்ட வாரியாக தொழில்நுட்ப பொருளாதார ஆய்வு நடத்தி வங்கி ஒன்று ரூ.1 கோடி செலவில் திட்ட அறிக்கை உருவாக்கப்படும் என அறிவித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக 22 கல்லூரிகளிடம் ஒப்பந்தம் செய்து, தாட்கோ நிறுவனம் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்த பயனாளிகளில் தொழில் நுட்ப பொருளாதார ஆய்வின் மூலம் திட்ட அறிக்கை வங்கி உருவாக்கி தாட்கோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்படி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இன்று (21.12.2022) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள 22 கல்லூரிகளில் பேராசிரியர்கள் மற்றும் சமூக பணி மாணாக்கர்களுடன் முதற்கட்டமாக கலந்துரையாடல் கூட்டம் தாட்கோ தலைவர் திரு. உ. மதிவாணன் அவர்கள் தொடங்கி வைத்தார். இக்கூட்டத்தில் தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு.க.சு..கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் மாணாக்கர்களுடன் கலந்து உரையாடல் நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் தாட்கோ பொது மேலாளர் (திட்டம்) திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள், கல்லூரி பேராசியர்கள் மற்றும் சமூகபணி மாணாக்கர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in